**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு- 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் ஆணைக்குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- வெளியிடப்பட்ட கணக்காய்விற்கு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள்களும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது

தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக˙கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பானகணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு ‘‘முறையாக திட்டமிடப்பட்ட’’

உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆணைக்குழுவின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 13,431,433,930 தொகை நிதிக்கூற்றுக்களில் காணப்பிக்கப்பட்ட போதிலும், இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம் அதன் நியாயமான பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு கொள்கை வரைவு தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் ஆரம்ப நடவடிக்கையாக விலை மதிப்பீட்டு திணைக்களத்துடன் இணைந்து காணி, கட்டிடங்கள் மற்றும் தொலைதொடர்பு கோபுரங்களுக்காக நிலையான சொத்துக்களை மீள் மதிப்பீழுடு செய்வதற்கு நிர்வாக பிரிவினால் ஆரம்ப செயற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட போதும், தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுகின்ற ரூபா 42,879,724 தொகையான நிலையான சொத்துக்கள் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் மீள் மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். வரைவு நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு கொள்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் இணக்கப்பாட்டிற்காக அனுப்பப்பட்டுள்ளது. அந்த இணக்கப்பாடு கிடைத்ததும் உடனடியாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுமென அறிய தருகின்றேன். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சொத்துக்களை மீள் மதிப்பிட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,625,000 பெறுமதியான 02 தொழில்நுட்ப உபகரணங்கள் தொழில்நுட்ப உபகரணங்கள் திருத்தம் | ஏற்றுக்கொள்கின்றோம் இந்தச் செலவுகள் நிலையான சொத்துக்களா அல்லது பராமரிப்புச் செலவினமா என, சம்பந்தப்பட்ட துறையிலிருந்து (Network) உறுதிப்படுத்துவதில் | நிதிக் கூற்றுக்களில் சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பராமரிப்பு கணக்கிற்கு வரவு வைத்தமையால் ஆண்டின் தேறிய இலாபம் மற்றும் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி அப் பெறுமானத்தினால் நிதிக் கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | தாமதம் ஏற்பட்டதால் சரியாக வகைப்படுத்தப்படவில்லை. எதிர்காலத்தில் சரியான கணக்கீட்டு நடைமுறை பின்பற்றப்பட்டு திருத்தம் செய்யப்படும் என்பதை காண்பிப்பதாக தெரிவித்துக் கொள்கிறோம். | |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி சேர் அடிப்படையிலான வரி பொறுப்பாக ரூபா 40,424,129 குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | அது ஆரம்ப மீதியில் காணப்படும் வித்தியாசமாகும். அவ்வித்தியாசத்தினை அவதானிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க நடைமுறைகளை எடுத்து வருகின்றோம். | நிதிக் கூற்றுக்களில் வரிப் பொறுப்புக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,818,166 ஆன அட்டுறு செலவினம் மற்றும் ரூபா 1,530,936 என்பன முற்பண கொடுப்பனவாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ரூபா 6,010,058 ஆன முன்னைய ஆண்டின் அட்டுறு செலவினமொன்று மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | LS Telcom, இற்கு 2020 ஆம் ஆண்டு தொடர்பான செலவுகளைச் செலுத்தவோ அல்லது அதே ஆண்டில் அவற்றைப் பதிவு செய்யவோ போக்குவரத்து முகாமைத்துவப் பிரிவிலிருந்து தகவல் நிதிப் பிரிவுக்கு அனுப்பப்படவில்லை. அதன்படி, கணக்குத் பிரிவால் பெறப்பட்ட திகதியைக் கருத்தில் கொண்டு செலவு கணக்கிடப்பட்டுள்ளது. | செலவினங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 07 அரச நிறுவனங்களில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 162,004,339 தொகையான கடன் மீதியொன்று காணப்பட்ட போதிலும், ஒரு அரச நிறுவனத்தின் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 4,257,266 ஆல் கூடுதலாகவும் ஏனைய 04 நிறுவனங்களில் கடன் கொடுத்தோர் மீதிகள் காணப்படவில்லையென அந்நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. | ஏற்றுக்கொள்ளவில்லை. கடன்பட்டோர் மீதிகளை உறுதிப்படுத்துவது குறித்து அறிவிக்கப்பட்ட நிறுவனங்களுக்கான எமது அந்தந்த கோவைகளில் செலுத்தப்படாத பட்டியல்கள் தொடர்பாக விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அந்த நிறுவனங்களுக்கு அவ்வப்போது நினைவூட்டல் கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கடன்பட்டோர் மீதிகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | தொலைத் தொடர்பு கோபுரமொன்றுக்காக 2019 ஆம் ஆண்டு மற்றும் 2020 | நிதிப் பிரிவுக்கு அதிர்வெண் முகாமைத்துவ பிரிவிடமிருந்து தகவல் அனுப்பி | ஆண்டிற்குரிய வருமானம் சரியாக இனங் |

| | | |
|---|---|---|
| ஆம் ஆண்டிற்காக கிடைத்த ரூபா 252,000 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் அப்பெறுமானத்தால் இலாபம் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இருக்கவில்லை. அதன் பிரகாரம் கணக்கு பிரிவிற்கு திகதி கருத்தில் கொண்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) பல வருடங்களுக்கு ஒரு முறை மாத்திரம் தொழிற்பாட்டு செயற்பாட்டாளர்களிடமிருந்து அதிர்வெண் முன் கட்டணங்களுக்காக அறவிடப்படுகின்ற ரூபா 3,324,250,000 மீளாய்வாண்டின் வருமானமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் வருமானத்தை இனங்காணும் அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப் படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம் எதிர்காலத்தில், இந்த வருமானத்தின் தன்மை பற்றிய அட்டவணையொன்று 3.4 வருமான இனங்காணல் Revenue Recognition கீழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். | நிதிக்கூற்றுக்களில் வருமான இனங்காணும் அடிப்படை வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| கடன்பட்டோர் | ரூபா 360,309,322 | மீதிகள் உறுதிப் படுத்தல் கடிதங்கள். | உங்களால் அனுப்பப்பட்ட கடன்பட்டோர் தெரிவிற்குரிய அனைத்து கடன்பட்டோர்களுக்கும் 2021.12.31 இல் உள்ளவாறு காணப்பட்ட கடன்பட்டோர் மீதிகளை உறுதிப்படுத்தி உங்களது நிறுவனத்திற்கு நேரடியாக பதிலை அனுப்புமாறு கோரி பதிவுத் தபாலில் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | கணக்குகளில் உள்ளடக்கப்பட்ட கடன்பட்டோர் மீதிகளை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கொக்காவில் தொலைத் | 3 அரச நிறுவனங்களால் | பெறவேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பு கோபுரங்களை பயன்படுத்துகின்ற செயற்பாட்டாளர்களிடமிருந்து மின்சாரக் கட்டணங்களாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 93,612,539 ஆக இருந்ததுடன் 03 அரச நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 92,656,990 ஆன மீதியொன்று அதில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு மாதாந்தப் பட்டியல் மாதாந்தம் வழங்கப்படுவதுடன், கொடுப்பனவிற்குரிய முன்னைய கொடு:ப்பனவுகள் செலுத்தப்பட்டு வருவதுடன் இன்னும் அண்மித்த மாதம் வரை முழுப்பணத்தையும் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. அப்பணத்தை அறவிடுவதற்காக தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடன்படடோர் மீதியில் காணப்படும் அனுமதிப்பத்திர தாரர்களிடமிருந்து கூடுதலாக அறவிடப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,178,047 தொகையை தீர்வு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த மீதிகளை பகுப்பாய்வு செய்து தீர்வு செய்யப்படும். | கடன்பட்டோர் மீதிகள் சீராக்கம் செய்யப் வேண்டும். |
| (இ) | தனியார் நிறுவன மொன்றிடமிருந்து 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய பெற வேண்டிய ரூபா 6,358,657 ஆன தொலைத்தொடர்பு வரி வருமானம் மற்றும் முன்னைய 03 ஆண்டுகளுக்குரிய 02 நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய ரூபா 5,083,244 ஆன தொலைத்தொடர்பு வரி மிகை கட்டணத்தை 2022 யூலை 06 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | Lanka Cable Satellite Network Ltd. LCSN நிறுவனம் செலுத்தாத ரூபா 6,358,657 ஆன தொலைத்தொடர்பு வரியை அறவிடுவதற்கு சட்டப் பிரிவின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு இயலுமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஆணைக்குழுவால் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த தனியார் கட்டிடமொன்றை 2015 ஆம் ஆண்டின் போது கையளிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக செலுத்திய ரூபா | சம்பந்தப்பட்ட கட்டிடத்தின் மூல கோவை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளதால், அவ்விசாரணை முடியும் வரை அது தொடர்பில் நடவடிக்கை | பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு இயலுமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | 1,350,000 ஆன பிடிகாசினை அறவிட்டிருக்கவில்லை. | எடுக்க முடியாது. FCID அது தொடர்பாக கையாள்வதில்லை எனத் தீர்மானித்துள்ளதாக நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. | வேண்டும். |
| (உ) | 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக செலுத்தப்பட்டிருந்த செஸ் கட்டணங்களுக்குரிய பெறுமதி சேசர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பல் வரித் தொகையான ரூபா 3,411,488 மற்றும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 254,135 தொகையான் செஸ் கட்டணங்கள் இரண்டு நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்தது. | Lanka Broadband Networks Ltd. நிறுவனம் 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான செஸ் கட்டணத்தை செலுத்தி உள்ளதுடன் செஸ் கட்டணம் தொடர்பான NBT மற்றும் VAT என ரூபா 3.411.488 கொடுப்பனவு செய்வதற்கு உள்ளதாக நிதிப் பிரிவால் LBN கம்பனிக்கு 2019.07.09 ஆந் திகதி வரிப்பட்டியல் மூலம் கொடுப்பனவு செய்யுமாறு பிரிவிற்கு அறிவித்திருந்தது, மேலும் தேவையான சட்ட நடவடிக்கைகள் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப் படுகின்றது. | பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு இயலுமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4..5 ஆம் பிரிவு | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2011 ஆம் ஆண்டு முதல் அறவிடுவதற்கு முடியாதிருந்த 04 உத்தியோகத்தர்களிடமிருந்து மோட்டார் வாகனக் கடனாக ரூபா 395,835 மற்றும் இடர் கடன் ரூபா 755,878 தொகை தொடர்பாக தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | கடன் தவணைகளை தீர்வு செய்யுமாறு அந்த உத்தியோகத்தர்களுக்கு மற்றும் பிணையாளிகளுக்கு 25.04.2022 ஆந் திகதி மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ளது. இடர் கடன் மற்றும் வாகனக் கடன்கள் வழங்குவது தொடர்பான புதிய சுற்றறிக்கை வழங்கப்பட்டுள்ளது, | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 9.12 ஆம் பிரிவு | ஆணைக்குழுவில் அமுலில் உள்ள மருத்துவ காப்புறுதிக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தினதும், பொது திறைசேரியினதும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்காக ரூபா 46,759,745 காப்புறுதி தவணையாக செலுத்தப்பட்டிருந்ததுடன் கம்பனியினால் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 27,262,649 தொகை காப்புறுதி மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. | 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு (திருத்தச்) சட்டத்தின் 22 (இ) (1) பிரிவின் ஏற்பாடுகள் மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள பிரகாரம் ஆணைக்குழுவினால் பதவியணியினருக்காக மருத்துவ காப்புறுதி முறைமை 1998 ஆம் ஆண்டில் இருந்து ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. நிதிஏற்பாடு வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்டு ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளப்பட உள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 9.14.2 ஆம் பிரிவு | ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் திறைசேரி செயலாளரின் இணக்கப்பாடு பெறப்படாதிருந்ததுடன், ஆணைக்குழு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத் தொடர்பு (திருத்தச்) சட்டத்தின் 22 (இ) (2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் பதவியணியினரின் நிர்வாகத்திற்குரிய விதிகளைத் தயாரிப்பதற்காக ஆணைக்குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். . |
| (இ) | 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் | சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் | இலங்கை தொலைத் தொடர்பு (திருத்தச்) | சுற்றறிக்கையின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தி | பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாமல் பதவியணியினருக்கு ஊக்குவிப்புப் படி, வீட்டு வாடகை படிகள் பயன்படுத்தப்படாத விடுமுறைகளுக்கான படிகளாக ரூபா 141,825,830 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | சட்டத்தின் 22இ (1) (ஆ) பிரிவின் பிரகாரம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மற்றும் சட்டமா அதிபரின் கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த இணக்கப்பாட்டின் பேரில் நடவடிக்கை எடுத்து கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ஈ) | 2007 யூன் 01 ஆந் திகதிய என்எஸ்சீசீ/3/ஏபீசீ/ 24 ஆம் இலக்க தேசிய சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் கடிதம் | பதவி நிலை தரமல்லாத பதவியணியிருக்காக அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த போக்குவரத்து படியான ரூபா 2,000 இனை விஞ்சி ரூபா 6,000 வீதம் செலுத்தப்பட்டமையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 8,620,000 தொகை மேலதிகாமாக செலுத்தப்பட்டிருந்தது. | இலங்கை தொலைத்தொடர்பு (திருத்தச்) சட்டத்தின் 22 (இ) (2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மற்றும் சட்டமா அதிபரின் கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த இணக்கப்பாட்டின் பேரில் நடவடிக்கை எடுத்து கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | தேசிய சம்பள மற்றும் ஊழியர் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 32,296,276,914 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 28,028,050,762 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,268,226,152 அதிகரிப்பொன்று காணப்படுவது அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் அனுமதி பத்திர கட்டண வருமானம் ரூபா 5,125,078,613 ஆலும் நானாவித வருமானம் ரூபா 382,823,667 ஆலும் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

ஆணைக்குழுவின் வருமானம் மற்றும் செலவினங்களை கடந்த வருடத்துடன் ஒப்பீடு செய்யும் போது கவனத்தில் கொள்ளக் கூடிய விலகல்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விபரம் | 2021.12.31 இல் உள்ளவாறு | 2020.12.31 இல் உள்ளவாறு | வேறுபாடு குறைவு/(அதிகரிப்பு) | வேறுபாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| அனுமதிப் பத்திர கட்டண வருமானம் | 17,162,602,169 | 12,036,758,914 | 5,125,843,255 | 42.58 |
| தொலைத்தொடர்பு வரி வருமானம் | 11,050,897,082 | 10,826,164,612 | 224,732,470 | 2.08 |
| தொலைத் தொடர்பு அபிவிருத்தி கட்டணம் | 3,620,901,150 | 4,292,953,440 | (672,052,290) | (15.65) |
| தொலைபேசி குறுஞ் செய்தி வரி | 399,954,804 | 418,650,656 | (18,695,852) | (4.47) |
| தொலைபேசி கோபுர வரி | 1,466,166,667 | 1,426,333,334 | 39,833,333 | 2.79 |
| மொத்த வருமானம் | **33,700,521,871** | **29,000,860,956** | **4,699,660,916** | **16.21** |
| மொத்த செலவினம் | 1,404,244,957 | 972,810,193 | 431,434,764 | 44.35 |
| ஆண்டின் வரிக்கு முன் இலாபம் | **32,296,276,915** | **28,028,050,763** | **4,268,226,152** | **15.23** |

(அ) 2020 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் 2021 ஆம் ஆண்டின் போது 43 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு பிரதானமாக பல வருடங்களுக்கு ஒருமுறை மாத்திரம் தொழிற்பாட்டு செயற்பாட்டாளர்களிடமிருந்து அறவிடப்படும் அதர்வெண் முன் கட்டணங்கள் ரூபா 3,324,250,000 தொகை 2021 ஆம் ஆண்டில் அறவிடப்பட்டமை மற்றும் நானாவித வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 382,823,667 ஆலும் அதாவது 78 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை தாக்கமளித்திருந்தது.

(ஆ) ஆணைக்குழுவின் மொத்த செலவினமான ரூபா 749,999,265 தொகையில் நிர்வாக மற்றும் செயற்பாட்டு செலவினங்களுக்காக ரூபா 660,795,995 தொகை அதாவது 88 சதவீதம் செலவிடப்பட்டிருந்ததுடன், பதவியணியினர் சம்பளம் மற்றும் படிகளுக்காக ரூபா 429,324,123 அதாவது 65 சதவீதம் அதில் உள்ளடங்கியிருந்தது. எவ்வாறாயினும் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதன் பிரதான நோக்கமான தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தலுக்காக மொத்த செலவினத்தில் ரூபா 50,060,177 தொகை அதாவது, 7 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஹந்தான அதிர்வெண் சரிபார்த்தல் நிலையம் அமைந்துள்ள 6.21 பேர்ச் அளவான காணியின் உரித்தை கையேற்பதற்காக 1999 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது | ஹந்தான அதிர்வெண் சரிபார்த்தல் நிலையம், உரிய கொடுப்பனவுகள் யாவும் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், முழு உரித்துறுதியை பெற்றுக் | சொத்துக்களின் உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | அதன் மதிப்பீட்டு பெறுமதி மற்றும் ஏனைய செலவினங்களுக்காக ரூபா 345,502 தொகை தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும். அதன் உரித்து மீளாய்வாண்டின் போதும் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் பிரதான அலுவலகம் மற்றும் கொக்காவில் பல்நோக்கு நிலையம் அமைந்துள்ள காணிகளின் உரித்துறுதியோ அல்லது வாடகை உடன்படிக்கையோ மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெறப்பட்டிருக்க வில்லை. | கொள்வதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர் அறிவித்திருந்தார். குறித்த செயற்பாட்டை விரைவில் பூர்த்தி செய்து தருமாறு அறிவித்து நினைவூட்டல் கடிதமொன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தலைமை அலுவலகம், கொக்காவில் பல்நோக்கு நிலைய காணியை விசேட வழங்கலொன்றாக கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. | வேண்டும். |
| (ஆ) | கதிரான அதிர் தயாரிப்பு நிலையத்தின் கட்டிடங்களை நவீனமயப்படுத்துவதற்காக வெட் இல்லாமல் ரூபா 139,882,281 பெறுமதிக்கு தனியார் நிறவனமொன்றுக்கு ஒப்பந்தம் 2019 சனவரி 31 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரர் கோரிய அளவீட்டு பத்திரத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 59,374,600 பெறுமதியான விலகலுக்கு கொடுப்பனவு செய்வதற்கு ஆணைக்குழு அங்கீகாரம் கிடைக்காமையால் 2021 யூலை 21 ஆந் திகதி முதல் நிர்மாணம் நிறுத்தப்பட்டிருந்தது, பின்னர் 2021 திசெம்பர் 14 ஆந் திகதிய அமப/21/306/094 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பேரில் ரூபா 24,360,085 ஆன அளவீட்டு பத்திரத்தில் உள்ளடக்கப்படாத விலகலுக்காக 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் 2019 பெப்ரவரி 13 ஆந் திகதி முதல் 270 நாட்களுக்குள் பூர்த்தி செய்ய வேண்டிய இச் செயற்திட்டம் 2022 யூன் 02 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானது ஒப்பந்தக்காரர் செயற்திட்டத்தின் விலகல்களை வழங்கி அது தொடர்பாக திட்ட ஆலோசகர்களின் பரிந்துரைகளையும் பெற்று ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட ஒரு சுயாதீன குழு விசாரணை நடத்தப்பட்டு விலகல்கள் குறித்து பரிந்துரைகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தது. அப்பரிந்துரையின் பேரில் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம் பணம் செலுத்தப்பட்டுள்ளது. | எதிர்பார்த்த பிரகாரம் செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தொலைபேசி செயற்பாட்டாளர்களின் தகவல் மற்றும் ஆணைக்குழுவின் ASMS (Antenna Structure Management System) தரவுகளுக்கு இடையே செய்யப்பட்ட ஒப்பீடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைக்காத கோபுரங்களின் எண்ணிக்கை 941 உம் ஆணைக்குழுவால் இனங் காணாத 2,778 கோபுரங்களும் காணப்பட்டன. | தொலைபேசி செயற்பாட்டு நிறுவனங்களால் நிறுவப்பட்ட கோபுரங்களின் எண்ணிக்கை மற்றும் ஆணைக்குழுவின் ASMS (Antenna Structure Management System) பற்றிய தரவு பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்படுவதுடன் கொவிட் 19 போன்ற காரணங்கள் சிலவற்றால் இலக்கிடப்பட்ட செயன் முன்னேற்றத்தை அடைந்து கொள்ள முடியாமல் போனது | ஒப்பீடு செய்யப்பட்டு முறையாக கோபுரங்கள் நிர்வகிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2011 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாட்டில் காணப்படுகின்ற மடுகந்த கோபுரத்தில் உள்ள 06 செயற்பாட்டாளர்களுடன் சேவை உடன்படிக்கை மற்றும் கொகாவில் கோபுரங்களை பயன்படுத்தும் 03 அரச நிறுவனங்களுடன் குத்தகை உடன்படிக்கைகளுக்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | மடுகந்த பரிமாற்றல் கோபுரத்தை பயன்படுத்தும் செயற்பாட்டாளர்களுடன் உடன் படிக்கை மேற்கொள்வதற்கு உரிய எதிர்வரும் செயற்பாடுகளை நிர்வாக பிரிவினால் சட்ட பிரிவின் ஆலோசணையின் பேரில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இரு தரப்பினருக்கு இடையே சட்டரீதியான கடப்பாடொன்றை ஏற்படுத்துவதற்காக செயற்பாட்டாளர்க ளுடன் எழுத்துமூல உடன்படிக்கை மேற்கொளளப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மக்கள் வங்கியில் 119-1-001-4-3693169 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட போதும் 2022 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு இனங்காணப்படாத ரூபா 31,586,543 ஆன மீதியொன்று இனங்காணப்பட்டு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம் நேரடியாக வைப்புச் செய்ய மூன்று மொழிகளிலும் வழிகாட்டியை சேர்த்து வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கச் செய்திருந்த போதிலும், அதைக் கடைப்பிடிக்கத் தவறிய வாடிக்கையாளர்கள் ரூபா 31,586,543 ஆன மீதி 30.06.2022 ஆந் திகதி அளவில் ரூபா 11,068,986.18 வரை குறைந்துள்ளது | நடைமுறைக் கணக்கினை சரியாக பேணி செல்ல நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபரகணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அம்பாந்தோட்டை தகவல் தொழில்நுட்ப பூங்காவில் தொலைத் தொடர்பு மத்திய நிலையத்தை நிர்மாணிப்ப தற்காக ஆணைக்குழுவினால் ஒப்பந்தகாரருடன் 2014 யூலை 28 ஆம் திகதி கைச்சாத்திடப் பட்ட உடன்படிக்கை ஆணைக்குழுவினால் 2016 ஆகஸ்ட் 10 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன், அந்த தீர்மானத்திற்கு எதிராக மதிப்பீடு செய்யப்பட்ட இழப்பீடு ரூபா 736,276,907 தொகைக்காக ஒப்பந்த காரரினால் பிணக்குகள் தீர்க்கும் சபைக்கு முறைப்பாடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படும் திகதியில் செயற்திட்டத்தின் பௌதீக செயன்முன்னேற்றம் 33 சதவீதம் ஆக இருந்ததுடன், அதற்காக செலவிடப்பட்ட ரூபா 684 மில்லியன் தொகையும் பயனற்ற செலவினமாக இருந்தது. | இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டிருந்ததுடன், மிகுதி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக காணப்படுகின்ற சட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சட்ட பிரிவு நடவடிக்கை எடுக்கின்றது. | ஆரம்பிக்கப்பட்ட நிர்மாணச் செயற்திட்டங்களை நிறுவனத்திற்கு நிதி நட்டம் ஒன்று இல்லாத வகையில் செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) ரூபா 502 மில்லியன் செலவில் ஆணைக்குழுவின் கட்டிடத்தை நவீனமயப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் 2016 ஆகஸ்ட் 24 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன் மதியுரை சேவைகளை வழங்குவதற்காக மொறட்டுவ பல்கலைக்கழகத்துடன் 2014 திசெம்பர் 30 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் மொத்த மதியுரைக் கட்டணம் சேவைக் கட்டணத்தில் 70 சதவீதமான ரூபா 10,057,910 | கட்டிடத்தை நவீன மயப்படுத்தும் செயற்திட்டத்திற்காக 2014 திசெம்பர் 30 ஆந் திகதி பல்கலைக்கழகத்தின் மதியுரை அலகுடன் சேவை வழங்குவதற்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. கொடுப்பனவு செய்வதற்கு உரிய அவதானிப்பு சரியானது. | நிறுவனத்திற்கு நிதி நட்டம் ஒன்று இல்லாத வகையில் செயற் திட்டத்தை செயற்படுத்த வேண்டும். |

தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதும் செயற்திட்டம் 2022 ஆகஸ்ட் வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) தாமரைக் கோபுர செயற்திட்டம்<br><br>2010 ஒக்தோபர் 27 ஆந் திகதிய 10/2473/401/031 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தாமரைக் கோபுர நிர்மாண ஒப்பந்தம் 02 சீனக் கம்பனிகளுக்கு கையளிக்கப்பட்டு, 2012 சனவரி 03 ஆந் திகதி ஆணைக்குழு இந்த கம்பனியுடன் அ.டொலர் 104.3 மில்லியன் பெறுமதியான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2012 நவம்பர் 12 முதல் 912 நாட்களில் இந்த ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்கு ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியிருந்தது.<br><br>இதற்காக 2012 செப்டம்பர் 17 ஆம் திகதி ஆணைக்குழு EXIM வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்த பெறுமதியில் 85 சதவீதம் அதாவது அ.டொலர் 88.655 மில்லியன் மாத்திரம் வழங்கு வதற்கு இணங்கியிருந்ததுடன், 2016 ஆகஸ்ட் 18 ஆம் திகதி வரையில் கடன் தொகை பெறப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. நிர்மாண ஒப்பந்தம் உரிய காலப்பகுதியில் பூர்த்தி செய்யாமையின் காரணமாக அ.டொலர் 67.260 மில்லியன் அதாவது, கடன் தொகையில் 76 | | |

| | | | |
|---|---|---|---|
| | சதவீதம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (i) | முழுக் கடன்தொகைக்காக காப்புறுதிக் கட்டணங்கள், ஒருங்கிணைப்புக் கட்டணங்கள் மற்றும் முகாமைத்துவக் கட்டணங்கள் செலுத்த வேண்டியுள்ளமையால் பெற்றுக் கொண்ட கடன் தொகைக்கு விகித சமனாக அ.டொலர் 2.9 மில்லியன் காப்புறுதிக் கட்டணங்கள், இணக்கக் கட்டணங்கள் மற்றும் முகாமைத்துவக் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தது. | Exim வங்கியுடன் தொடர்புடைய மேற் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஒருங்கிணைப்பு கட்டணம், முகாமை கட்டணங்கள், காப்புறுதி கட்டணங்கள் ஆகியவை செலுத்தப்பட வேண்டிய போதும் கடன் தொகையில் இருந்து பயன்படுத்தப்படாத பகுதிக்கு செலுத்தப்பட்ட கட்டணத்தை திரும்பப் பெறுவது குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | நிறுவனத்திற்கு நிதி நட்டம் ஒன்று இல்லாத வகையில் ஒப்பந்த செயற்பாட்டினை செயற்படுத்த வேண்டும். |
| (ii) | செயற்திட்டத்தின் நிதி சாத்தியவள ஆய்வு அறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டு முதல் செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும், அதன் மூலம் முதலாவது 05 வருடங்களுக்காக வருடத்திற்கு ரூபா 1,685 மில்லியன் வருமானமும், இரண்டாவது 05 வருடங்களுக்காக வருடத்திற்கு ரூபா 1,918 மில்லியன் வருமானமும் உழைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்ட நடவடிக்கைகள் தாமதம் அடைந்ததன் அடிப்படையில் அந்த வருடாந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. நிதி சாத்தியவள ஆய்வு அறிக்கையின் பிரகாரம் உழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தின் அடிப்படையில் கணிப்பிடும் போது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இழக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 11,557 மில்லியனாக இருந்தது. | செயற்திட்டத்தை உரிய காலப்பகுதியில் ஆரம்பிக்க முடியாமையால் சாத்தியவள ஆய்வு அறிக்கையின் பிரகாரம் வருமானத்தை உழைப்பதற்கு முடியாதிருந்தது. தற்போது அரச் கம்பனியொன்று ஆரம்பிக்கப்பட்டு வருமானம் உழைக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்த்த படி இலக்கிடப்பட்ட வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | ஆரம்ப திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் கடன் தவணை செலுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி | திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந் துள்ளதுடன் அரச கம்பனியொன்று தாபிக்கப்பட்டு, வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை | நிறுவனத்திற்கு நிதி நட்டம் ஒன்று இல்லாத வகையில் ஒப்பந்த |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்படாமையின் காரணமாக 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 9,900 மில்லியன் கடன் தவணைப் பணம் மற்றும் வட்டியாக ஆணைக்குழுவின் நிதியில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. | ஆரம்பிப்பதற்கு தயாராக உள்ளது. | செயற்பாட்டினை செயற்படுத்த வேண்டும். |
| (iv) | 2019 செப்டம்பர் 16 ஆம் திகதி ரூபா 11.3 மில்லியன் செலவில் தாமரைக் கோபுரம் உத்தியோகபூர்வமாக திறக்கப்பட்ட போதிலும், 2022 ஆகஸ்ட் மாதம் வரையும் வியாபார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆணைக்குழுவிற்கு கை யேற்கக்கப்பட்டுள்ளதுடன், பொது கம்பனியொன்றை நிறுவி, வருமானம் ஈட்டக்கூடிய செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கும் தேவையான பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகின்றன. | செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பித்து வருமானத்தை உழைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் தாமரைக் கோபுர வணிக மயப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் செலவிடப்பட்ட காப்புறுதி தவணை மற்றும் ஒப்பந்த பதவியணியினருக்கு படிகளாக ரூபா 56 மில்லியன் தொகை தாமரைக் கோபுர வணிக மயப்படுத்தல் நடவடிக்கை களுக்காக நிறுவப்பட்ட Colombo Lotus Tower Management Company Ltd கம்பனியிடமிருந்து அறவிடும் அடிப்படையில் பெறவேண்டிய கணக்குகளாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆணைக்குழு தீர்மானத்தின் பிரகாரம் அறவீட்டு அடிப்படையில் பெற வேண்டிய கணக்குகளாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | கம்பனி ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் செலவிடப்பட்ட செலவினங்களை மீள அறவிடுவதற்கு செயற்பட வேண்டும். |
| (ஆ) | தாமரைக் கோபுர செயற்திற்காக மதியுரை கட்டணங்களை கொடுப்பனவு செய்தல்<br>------------------------------------------------------------ | | |
| | 2010 ஒக்டோபர் 27 ஆம் திகதிய 10/2473/401/031 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தாமரைக் கோபுர நிர்மாணத்திற்காக மதியுரை சேவையினை பெற்றுக் கொள்வதற்காக மொறட்டுவை பல்கலைக்கழகத்துடன் மேற் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மதியுரைக் கட்டணமாக | தாமரைக் கோபுர செயற்திட்டத்தின் உடன் படிக்கை காலப்பகுதியில் நிர்மாணங்களை பூர்த்தி செய்து ஆணைக்குழுவிற்கு கையளிப்பதற்கு தவறியிருந்தது மேலும் அமைச்சரவை அங்கீகாரத்துடனான உடன்படிக்கை பிரகாரம் செயற்திட்டத்தை பூர்த்தி செய்து | நிறுவனத்திற்கு நிதி நட்டம் ஒன்று இல்லாத வகையில் ஒப்பந்த செயற்பாட்டினை செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்த தொகையில் 1.5 சதவீதம் அதாவது ரூபா 198.7 மில்லியன் செலுத்துவதற்கு இணங்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 150 மில்லியன் மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன், 2015 நவம்பர் 26 ஆம் திகதிய 2k15.219.13(ii) ஆம் இலக்க ஆணைக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் மதியுரைச் சேவை உடன்படிக்கை 2017 ஒக்டோபர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 72 மில்லியனும் உடன்படிக்கை காலம் முடிவடைந்த பின்னர் ரூபா 59.8 மில்லியனும் திறந்து வைக்கப்பட்ட தன் பின்னர் தாமரைக் கோபுரம் ஆணைக்குழுவிற்கு கையளிக்காமையால் ரூபா 51.1 மில்லியனும் என 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 332.9 மில்லியன் மதியுரைக் கட்டணமாக மொறட்டுவை பல்கலைக் கழத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உடன்படிக்கை பெறுமானத்தை மிகைத்து ரூபா 134.2 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு கையளிக்கும் வரை செயற்திட்ட பொறியியலாளர் (மொறட்டுவை பல்கலைக்கழகம்) ஒப்பந்தத்தின் செயற்பாடு களை பூர்த்தி செய்து கொள்வதற்காக தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்காக செயற்திட்ட உரிமையாளரின் பொறுப்பாகும். அதன் பிரகாரம் திட்டப் பொறியியாளரின் பங்கை நிறைவேற்றுவதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் திட்ட ஒப்பந்ததாரர் அவ்வப் போது வழங்கிய திட்ட நிறைவு இலக்குகளின்படி நீடிக்கப்பட்டது. தற்போது திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளதால், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்திற்கு இனி மாதாந்த ஆலோசனைக் கட்டணம் செலுத்த தேவையில்லை | |
| (இ) | ரூபா 209 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியான ஆணைக்குழுவின் புதிய கட்டிட நிர்மாணச் செயற்திட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் மொறட்டுவ பல்கலைக்கழகத்துடன் 2019 யூன் 10 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிர்மாண மதியுரைக் கட்டணங்களாக ரூபா 7,318,256 தொகை மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2020 பெப்ரவரி 15 ஆந் திகதி வரையிலும் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்து கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த | அவதானிப்பு சரியானது. | உடன்படிக்கை காலப்பகுதியில் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

துடன் ஒப்பந்தத்தின் கால நீடிப்பும் இடம்பெற்றிருக்கவில்லை.

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக் குழுவின் வெற்றிடங்கள் 79 ஆக இருந்ததுடன், மேலதிக / பிரதி பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர் மற்றும் பிரதி / உதவி பணிப்பாளர் பதவிகளுக்காக 31 வெற்றிடங்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அத்தோடு நிரந்தர பதவியணியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இரண்டாம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்கள் முறையே 07 மற்றும் 11 பேர் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். மேலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப் படாத உதவி கணக்காளர் பதவிக்காக நிரந்தர அடிப்படையில் இரண்டு உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளம், வீட்டு வாடகை படிகள், ஊக்குவிப்பு படிகள் மற்றும் போக்குவரத்து படிகளாக ரூபா 1,815,699 தொகை மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. | ஆட்சேர்ப்பு நடைமுறைகளை திருத்துதல், நிறுவன கட்டமைப்பை மாற்றுதல் மற்றும் புதிய ஊழியர்களுக்கான ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கு ஒப்பந்தம் செய்துள்ள இலங்கை அபிவிருத்தி நிர்வாகத்துடன் கலந்துரையாடல்களை நடத்தி ஆட்சேர்ப்பு நடைமுறைகளை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.<br><br>கொவிட்-19 தொற்று நிலைமை காரணமாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்துடன் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் கலந்துரையாட முடியாமல் போனமை ஆணைக்குழுவின் அதிக எண்ணிக்கையிலான தொழில்நுட்ப பதவிகளை கொண்டுள்ளதால் ஆட்சேர்ப்பு தகுதிகள் மற்றும் ஒதுக்கப்பட்ட கடமைகள் தொடர்பாகவும் விரிவாக விவாதிக்கப்பட வேண்டியதால் இதுவரை ஆட்சேர்ப்பு நடை முறைகளை தயாரித்து பூர்த்தி செய்ய முடியவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை திருத்துதல், நிறுவன கட்டமைப்பை மாற்றுதல் மற்றும் புதிய பதவியணியனிர், செயலாற்றல் மதிப்பீடு போன்ற | கொவிட் தொற்று நிலைமை காரணமாக் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்துடன் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் கலந்துரையாட | உடன்படிக்கையின் பிரகாரம் செயயற்பாடுகளைப் பூர்த்தி செய்து ஆணைக்குழுவிற்கு நலன்களைப் |

செயற்பாடுகளுக்காக மதியுரைச் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்துடன் ரூபா 2,992,330 பெறுமதியான உடன்படிக்கையொன்று 2020 ஒக்தோபர் 20 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. உடன்படிக்கை காலம் நீடிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அச்செயற்பாடு பூர்த்தி செய்யப்படாதிருந்த போதும் அத்திகதியில் அச் செயற்பாட்டிற்காக ரூபா 1,496,166 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. தாமதக் கட்டண அறவீடு உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் செயலாற்றல் பிணையும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

முடியாதிருந்தமையாலும் தொழில்நுட்ப தன்மையிலான பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட வேண்டியதால் இச்செயற்பாட்டினை நிறைவேற்ற முடியாமல் இருந்தது. அத்துடன் இதன் காரணமாக தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கும் இயலுமை இல்லையென அவதானிக்கப்பட்டது.

பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.